


# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com




சென்னை மலர்: 01 இதழ்: 109 14.10.2025 செவ்வாய்க்கிழமை
Chennai | Volume: 01 | Issue: 109 | Tuesday | pages 4 | Rs.5/-

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(14–10–2025)
விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–28
பிறை: தேய்பிறை
திதி
அஷ்டமி மாலை 4.40 வரை
பிறகு நவமி
நட்சத்திரம்:
புனர்பூசம் மாலை 5.43 வரை
பிறகு பூசம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 5.00–4.30 மணி
எமகண்டம்
காலை 5.00–10.30 மணி
சூலம் –வடக்கு
நல்ல நேரம் :
காலை 8–9 மணி மாலை 5–6 மணி

| | |
|---|---|
| மேஷம் | அமைதி |
| ரிஷபம் | தாமதம் |
| மிதுனம் | நன்மை |
| கடகம் | ஆசை |
| சிம்மம் | உயர்வு |
| கன்னி | ஆர்வம் |
| துலாம் | முயற்சி |
| விருச்சிகம் | உதவி |
| தனுசு | பண்பு |
| மகரம் | பக்தி |
| கும்பம் | லாபாம் |
| மீனம் | வெற்றி |

## பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் போரையும் நிறுத்துவேன்



**அமெரிக்கா,அக்.14:**

இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அமெரிக்க அதிபர் டிரம்ப் முதல்முறையாக இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றார்.

ஹமாஸ் அமைப்பால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளின் குடும்பத்தினரை சந்திக்கும் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்து, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.

இஸ்ரேல் பயணத்தை முடித்துக்கொண்டு டிரம்ப் அங்கிருந்து எகிப்து செல்கிறார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், “போர்களைத் தீர்ப்பதில் சிறந்தவன் நான். பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் இடையே போர் நடப்பதாக கேள்விப்பட்டேன். மத்திய கிழக்கு பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா திரும்பியதும், அதையும் நிறுத்துவேன். காசா போர் என்பது நான் தீர்த்து வைத்த 8வது போராகும்” என்று தெரிவித்தார்.

# கரூர் கூட்டநெரிசல் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உச்ச நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

**புது தில்லி,அக்.14:**

கரூரில் நடைபெற்ற தவெக கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியான சம்பவம் குறித்து சிபிஐ விசாரணை நடத்த உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிபிஐ விசாரணையை முன்னாள் உச்ச நீதிமன்றம் நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு கண்காணிக்கும் என்றும், இந்த கண்காணிப்புக் குழுவில் தமிழ்நாடுப் பிரிவைச் சேர்ந்த இரண்டு ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெற வேண்டும் என்றும், ஆனால் அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது என்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஜே.கே. மகேஷ்வரி, என்.வி. அஞ்சாரியா அமர்வு குறிப்பிட்டுள்ளது.

தமிழக காவல்துறை அதிகாரி தலைமையில், சிறப்பு விசாரணைக் குழு அமைத்து சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து தவெக தரப்பில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் இன்று இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறது.

கரூர் மாவட்டத்தில் கடந்த செப்.27ஆம் தேதி நடந்த தவெக தலைவர் விஜய் பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியான சம்பவம் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய சென்னை உயர் நீதிமன்றம், காவல்துறை அதிகாரி தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைத்து உத்தரவிட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தவெக தரப்பில் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கில், எதிர்மனுதாரராக சேர்க்கப்படாத தவெக தலைவர் விஜய் பற்றி, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வெளியிட்ட கருத்துகளையும் நீக்கக் கோரி, தவெக சார்பில் வலியுறுத்தப்பட்டது.



## சிபிஐ விசாரணையை கண்காணிக்கும் ஓய்வுபெற்ற நீதிபதி

கரூரில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவுப்படி ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்புபுலனாய்வுகுழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தமிழக வெற்றிக்கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டு தனி நீதிபதி, கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று தவெக தரப்பு வலியுறுத்தியது.

இந்நிலையில், இந்த வழக்கை இன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், கரூர் கூட்டநெரிசல் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது.

இது இடைக்கால உத்தரவு மட்டுமே என்று தெளிவுபடுத்திய உச்சநீதிமன்றம், சிபிஐ விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

விசாரணை குழுவில் 2 ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெறுவார்கள். எனினும் அவர்கள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



### யார் இந்த அஜய் ரஸ்தோகி?

ராஜஸ்தானைச் சேர்ந்த அஜய் ரஸ்தோகி, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியாக 2018 முதல் 2023 வரை பணியாற்றியவர்.

2004 முதல் 2018 வரை ராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதிபதியாகவும், 2018ல் திரிபுரா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பணியாற்றி உள்ளார்.

உச்ச நீதிமன்றத்தில் தனது பதவிக் காலத்தில், ரஸ்தோகி 158 வழக்குகளை விசாரித்துள்ளார். குறிப்பாக ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆதரவாகவும், திருமணத்தை மீறிய உறவுகளை குற்ற மற்றதாக்குதல், கருணைக் கொலை உரிமைக்கு ஆதரவாகவும் பல முக்கிய தீர்ப்பு அஜய் ரஸ்தோகி வழங்கியுள்ளார்.

## சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிக்கு உச்சநீதிமன்றம் கண்டனம்

கரூரில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் பிரசாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவுப்படி ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு தமிழக வெற்றிக்கழகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டு தனி நீதிபதி, கரூர் சம்பவம் தொடர்பாக விசாரணை குழு அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றது. இந்த மனு, நீதிபதிகள் மகேஸ்வரி, அஞ்சாரியா ஆகியோர் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக போலீசை மட்டும் கொண்ட சிறப்பு புலனாய்வு குழு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட வேண்டும் என்று தவெக தரப்பு வலியுறுத்தியது. இந்நிலையில், இந்த வழக்கை இன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், கரூர் கூட்டநெரிசல் வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டது.

இது இடைக்கால உத்தரவு மட்டுமே என்று தெளிவுபடுத்திய உச்சநீதிமன்றம், சிபிஐ விசாரணையை கண்காணிக்க ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையில் 3 பேர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

விசாரணை குழுவில் 2 ஐபிஎஸ் அதிகாரிகள் இடம்பெறுவார்கள். எனினும் அவர்கள் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் கூட்ட நெரிசல் வழக்கை விசாரித்த விதத்திற்கு சென்னை உயர்நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

எதையும் ஆய்வு செய்யாமல் சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி சிறப்பு புலனாய்வு குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார் என கூறிய உச்சநீதிமன்றம், சிறப்பு விசாரணை குழு விசாரணைக்கு உத்தரவிட்டது எப்படி என்றும் சென்னை உயர்நீதிமன்றத்திடம் உச்சநீதிமன்றம் விளக்கம் கேட்டுள்ளது.

பரப்புரை குறித்து வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க கோரிய வழக்கு, கிரிமினல் வழக்காக பட்டியலிடப்பட்டது எப்படி? என உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் அறிக்கை தர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய்க்கு தலைமை பண்பு இல்லை என்றெல்லாம் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கருத்துத் தெரிவித்திருந்த நிலையில், அதனை நீக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் வாதம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில், தவெக தரப்பு வாதங்களை ஏற்று, சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டதோடு, உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் மூன்று பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவையும் அமைத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களின் அடிப்படை உரிமைகள் சார்ந்த விவகாரமாக இதைக் கருதுவதாகவும், நியாயமான, பாரபட்சமற்ற விசாரணை மக்களின் உரிமை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது.

மனுதாரர்களுக்குத் தெரியாமல் மனு

மனைவி மற்றும் பிள்ளையை பிரிந்து வாழ்ந்து வரும் பன்னீர்செல்வம் என்பவர், பிள்ளை இறந்தது குறித்து குடும்பத்தாருக்கு தெரியாமல் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாகவும், மனைவியை இழந்த செல்வராஜ் என்பவரிடம் அதிமுகவினர் போலியாக கையெழுத்த வாங்கி மனு தாக்கல் செய்ததாகப் புகார் எழுந்தது.

மனுதாரர்களுக்குத் தெரியாமல் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளனர் என அபிஷேக் சிங்வி வாதத்தை முன் வைத்த நிலையில், கணவர் பன்னீர்செல்வத்துக்கு எதிராக, அவரது மனைவி காணொலி வாயிலாக ஆஜராகி, தவெகவின் நிவாரணத் தொகைக்காக பன்னீர்செல்வம் வழக்குத் தொடர்ந்ததாக சிறுவனை இழந்த தாய் சாட்சியமளித்துள்ளார்.

# இன்றுமுதல் 4 நாள்கள் சட்டப்பேரவை கூட்டம்! - அப்பாவு

**சென்னை,அக்.14:**

தமிழக சட்டபேரவை கூட்டத்தொடர் இன்று(அக். 14) முதல் 17 ஆம் தேதி வரை நடைபெறும் என்று பேரவைத் தலைவர் அப்பாவு கூறியுள்ளார்.

இந்நிலையில் கூட்டத்தொடர் எத்தனை நாள்கள் நடத்துவது என்பது குறித்து பேரவைத் தலைவர் அப்பாவு தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று அலுவல் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



அதன் பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அப்பாவு,

“இன்று (அக்.14) சட்டப்பேரவை கூடுகிறது. மறைந்த முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி பீலா வெங்கடேசன், ஜார்கண்ட் முதல்வராக இருந்த சிபு சோரன் உள்ளிட்டோருக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்படும்.

இன்று(அக். 14) மறைந்த எம்எல்ஏ அமுல் கந்தசாமிக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்படும். கரூர் கூட்ட நெரிசலில் இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

அக். 15 ஆம் தேதி கூடுதல் மானியக் கோரிக்கை முன்வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறும். அக். 17 ஆம் தேதி விவாதத்திற்கு முதல்வர் பதிலளிப்பார்” என்று தெரிவித்தார்.

தினம்தோறும் வெளிவரும் ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.anandabhaskar.com/
இணையதளத்தில் படித்து மகிழலாம்.

# 5-வது நாளாக தொடரும் கியாஸ் டேங்கர் லாரிகள் வேலைநிறுத்தம்


**நாமக்கல்,அக்.14:**

நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தென்மண்டல எல்.பி.ஜி.கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 9-ந் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த போராட்டம் இன்று 5-வது நாளாக நீடித்து வருகிறது. இதன் காரணமாக கியாஸ் டேங்கர் லாரிகள் சாலை ஓரங்கள் மற்றும் பட்டறைகளில்



நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கியாஸ் டேங்கர் லாரிகள் வேலைநிறுத்தம் காரணமாக சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சிலிண்டர்களில் கியாஸ் நிரப்பும் தொழிற்சாலைகளுக்கு கியாஸ் கொண்டு செல்லும் பணி முற்றிலுமாக முடங்கியுள்ளது. எனவே தமிழகம் உள்பட தென்மாநிலங்களில் கியாஸ் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.



## 1,600 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்



சென்னை காரம்பாகக்தில் நேற்று நடந்த விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 1,600 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.உடன் அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், முத்துசாமி, மா.சுப்பிரமணியன், மேயர் பிரியா,கணபதி எம்எல்ஏ, கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா,கலெக்டர் ரஷ்மிசித்தார்த் ஜகடே உள்பட பலர் உள்ளனர்.

## விரிஞ்சிபுரம் ஸ்ரீமார்க்கபந்தீஸ்வரர் கோயில் திருப்பணி தொடக்க விழா!



**வேலூர்,அக்.14:** இந்து சமய அறநிலையத் துறை சார்பில், வேலூர் மாவட்டம், விரிஞ்சிபுரம் அருள்மிகு ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோவில் சுமார் ரூ. 4.38 கோடி மதிப்பீட்டிலான திருக்கோயில் புனரமைப்பு திருப்பணி தொடக்க விழாவில் திமுக வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு தொகுதி எம்எல்ஏவுமான ஏ.பி. நந்தகுமார் கலந்து கொண்டு திருக்கோவில் புனரமைப்பு திருப்பணியை தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு ,கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன், மத்திய ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன், அனிதா, சங்கர், பல்வேறு அரசு துறை அலுவலர்கள், ஒன்றிய குழு பெருந்தலைவர், மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ,ஆலய நிர்வாகிகள், திமுக நிர்வாகிகள், திமுக உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## கோல்ட்ரிப் இருமல் மருந்து விவகாரம் ஸ்ரீசன் பார்மா நிறுவன உரிமம் ரத்து




**சென்னை, அக்.14:** மத்தியபிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் கோல்ட்ரிப் இருமல் மருந்தை உட்கொண்ட 24 பச்சிளம் குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்தது அதிர்வலையை ஏற்படுத்தியது. உயிரிழந்த குழந்தைகளின் சிறுநீரகத் திசுவில் டை எத்திலீன் கிளைக்கால் எனப்படும் வேதிப்பொருள் கலந்திருப்பது கண்டறியப்பட்டது.

இது தொடர்பான விசாரணையில், காஞ்சிபுரம் அடுத்த சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட கோல்ட்ரிப் இருமல் மருந்தில், தடை செய்யப்பட்ட ரசாயனம் கலந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையில் நச்சுத் தன்மையுள்ள ரசாயனம் கலந்த கோல்ட்ரிப் (COLDRIF COUGH SYRUP) என்ற இருமல் மருந்தே குழந்தைகளின் உயிரிழப்புக்கு காரணம் எனவும், இந்த மருந்தை தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஸ்ரீசன் பார்மா நிறுவனம் தயாரித்ததும் தெரிய வந்தது.

இதையடுத்து தமிழகம் உள்பட பல்வேறு மாநிலங்களில் கோல்ட்ரிப் இருமல் மருந்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்.3-ந்தேதி ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் மருந்து தயாரிப்பு ஆலையில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது மருந்து தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மாதிரிகள் கைப்பற்றப்பட்டன. அதில் உயிருக்கு தீங்கு விளைவிக்கும் அளவுக்கு 48.6% டை எத்திலீன் கிளைக்கால் என்ற வேதிப்பொருள் கலக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இதனால் அந்நிறுவனத்தின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தில் கடந்த ஆண்டு உரிய ஆய்வு செய்யாத 2 அதிகாரிகள் ஏற்கனவே சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து தலைமறைவாக இருந்த ஸ்ரீசன் பார்மா நிறுவன உரிமையாளர் ரங்கநாதன் சென்னை அசோக் நகரில் கைது செய்யப்பட்டார். சைதாப்பேட்டைநீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ரங்கநாதனுக்கு, டிரான்சிட் வாரண்ட் வழங்கியதையடுத்து, மத்திய பிரதேசம் போலீசார் அவரை அம்மாநிலத்துக்கு அழைத்து சென்றனர்.

இந்நிலையில் காஞ்சிபுரம் அடுத்த சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் உரிமம் ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஸ்ரீசன் நிறுவனத்தின் மருந்து தயாரிக்கும் உரிமங்கள் முழுவதுமாக ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் மாநிலம் முழுவதும் உள்ள மருந்து தயாரிப்பு ஆலையில் முழுமையான விசாரணை, ஆய்வு நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

## 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார்



தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் ஸ்டாலின் நேற்று வழங்கினார்.

## இடைக் காடர் சித்தர் 23 ஆண்டு ஜெயந்தி விழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாடு செய்தனர்



**சிவகங்கை, அக். 14:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ளது. இடைக் காட்டூர் பதினென்சித்தர்களின் ஒருவரான இடைக்காடார் இங்கு வாழ்ந்து நவகிரகங்களை திசைமாற்றி பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்த நவகிரகங்கள் சன்னதி உள்ளது. இங்கு ஆண்டுதோறும் இடைக்காடார் சித்தர் ஜென்ம நட்சத்திரம் திருவாதிரை நாளில் ஜெயந்தி விழா நடைபெறும்.

23 ஆண்டு ஜெயந்தி விழா இரண்டு நாட்கள் குரு ஆராதனை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. முதல் நாள் மாலை திருவிளக்கு பூஜை (சித்தரின் ஒளி தேக தரிசனம்) இரவு 9.00 மணி : ஸ்ரீ இடைக் காடர் சித்தர் திருவீதி உலா நடைபெற்றது.

அதைதொடர்ந்து நேற்று திங்கட்கிழமை காலை 5.00 மணி: சிறப்பு ஹோமங்கள், சிறப்பு யாகங்கள் (பஞ்சபூத சக்தி வழிபாடு) காலை 9.00 மணி : கோ பூஜை, பரி பூஜை, கிடாய் (ஆடு) பூஜை காலை 10.00 மணி : சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

இதில் ஏராளமான சிவனடியார்கள் கைலாய வாத்தியங்கள் முழங்கி வழிபாடு செய்தனர். அதைதொடர்ந்து பகல் 12.00 மணி: முதல் மாலை வரை அன்னதானம் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இடைக்காடார் சித்தர் சுவாயை தரிசனம் செய்தனர்.

இரண்டு நாட்கள் விழா ஏற்பாடுகளை இடைக்காடார் சித்தர் ஞானபுன்னிய ஷேத்திரம் டிரஸ்ட் சார்பில் செய்து இருந்தனர்.

## தமிழ்நாட்டில் ரூ.15 ஆயிரம் கோடி முதலீடு செய்யும் ஃபாக்ஸ்கான்- 14 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு




**சென்னை, அக்.14:** தமிழ்நாட்டில் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான அரசு தொடர்ச்சியாக பல்வேறு முதலீடுகளை ஈர்த்த வண்ணம் இருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் முதலீட்டாளர்கள் மாநாடு, அனைத்து மாவட்டங்களிலும் டைடல் பூங்காக்கள் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஃபாக்ஸ்கான் நிறுவனம் சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் தன்னுடைய ஐபோன் உற்பத்தி ஆலையை நிறுவி செயல்படுத்தி வருகிறது.

இதன் மூலம் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படக்கூடிய ஐபோன்கள் உலகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன.

அந்த வகையில் அடுத்த கட்டமாக ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் மேலும் ரூ.15,000 கோடி முதலீடு செய்வதாக உறுதி அளித்துள்ளது. சென்னை அருகே மிகப்பெரிய ஆலையையை அமைக்க வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

இந்த ஒப்பந்தம் மூலம் தொழிற்சாலை தொடங்கப் பட்டால், 14,000 பேருக்கு புதிதாக வேலை கிடைக்கும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த ஃபாக்ஸ்கான் இந்தியாவின் பிரதிநிதி ராபர்ட்வூ இதனை உறுதி செய்துள்ளார்.

இதுபற்றி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா,

தமிழ்நாட்டின் பொறியியல் மற்றும் உயர் தொழில்நுட்ப உற்பத்தித் துறைக்கு ஒரு பெரிய ஊக்கமளிக்கும் வகையில், ஃபாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் மிகப்பெரிய முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உறுதிமொழியை அளித்துள்ளது.

ரூ.15,000 கோடி முதலீடு மூலம் 14,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மையமாக மாற்றும் முக்கிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்க நிகழ்வு



தஞ்சாவூரில் நேற்று தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை ஊழியர் சங்க நிகழ்வில் சிபிஎம் அரசியல் தலைமை குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் பேசினார்

## சாதி மாறி காதல் திருமணம் தல தீபாவளி கொண்டாட வேண்டிய புது மாப்பிள்ளை ஆணவக் கொலை



**நிலக்கோட்டை, அக்.14:** திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே உள்ள ராமநாயக்கன் பட்டியைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் (வயது 24). பால் வியாபாரம் செய்து வந்தார். மேலும் வெவ்வேறு பகுதிகளுக்கு சென்று பால் கறவை தொழிலும் செய்து வந்தார்.

இவர் பால் கறக்கும் தொழிலுக்கு செல்லும் போது வீடு அருகே உள்ள கணபதிபட்டியைச் சேர்ந்த சந்திரன் (49) என்பவரின் மகளான ஆர்த்தி (21) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. ஆர்த்தி கரூரில் உள்ள தனியார் கல்லூரியில் பி.காம் 2-ம் ஆண்டு படித்து வருகிறார்.

இவர்கள் காதல் நாளுக்கு நாள் வேகமாக வளர்ந்து வந்தது. இருவரும் வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களது காதலுக்கு பெண் வீட்டார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

குறிப்பாக ஆர்த்தியின் தந்தை சந்திரன் திருமணத்துக்கு சம்மதிக்கவில்லை. இதனால் தங்களை பிரித்து விடுவார்களோ என அச்சமடைந்த காதலர்கள் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டனர். அதன் பிறகும் பெண் வீட்டார் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனைத் தொடர்ந்து ராமச்சந்திரன் குடும்பத்தினர் சம்மத்துடன் காதல் தம்பதி ராமநாயக்கன்பட்டியில் தனியாக வசித்து வந்தனர். திருமணத்துக்கு பிறகு ஆர்த்தியின் குடும்பத்தினர் அவ்வப்போது ராமச்சந்திரன் குடும்பத்தினருடன் பேசி வந்த போதிலும் மாமனார் சந்திரன் பேசாமல் இருந்து வந்தார். மேலும் மாப்பிள்ளை வீட்டாருக்கும், ராமச்சந்திரனுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனிடையே திருமணம் முடிந்து தலைதீபாவளியை கொண்டாட காதல் தம்பதியினர் தயாராகி வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை ராமச்சந்திரன் நிலக்கோட்டை அருகே உள்ள குல்லிப்பட்டிக்கு பால் கறப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றார். பின்னர் மீண்டும் அங்கிருந்து தனது வீட்டுக்கு திரும்பி வந்து கொண்டு இருந்தார். கூட்டாத்து அய்யம்பாளையம் பகுதியில் உள்ள பாலத்தின் வழியாக ராமச்சந்திரன் வந்தபோது அங்கு ஏற்கனவே நின்று கொண்டு இருந்த மாமனார் சந்திரன் அவரை வழிமறித்து தகராறு செய்தார். அப்போது அவர்கள் 2 பேருக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த சந்திரன் தான் ஏற்கனவே மறைத்து வைத்திருந்த அரிவாளால் ராமச்சந்திரனை சரமாரியாக வெட்டினார். இதனை எதிர்பார்க்காத ராமச்சந்திரன் பைக்கை விட்டு இறங்கி ஓட முயன்றார். இருந்தபோது துரத்திச் சென்று வெட்டியதில் ராமச்சந்திரன் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பலியானார். பின்னர் சந்திரன் அங்கிருந்து தப்பி ஓடினார்.

இதைப் பார்த்து அப்பகுதி மக்கள் நிலக்கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீசார் கொலை செய்யப்பட்ட ராமச்சந்திரனின் உடலை கைப்பற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் தப்பி ஓடிய சந்திரனை வலை வீசி தேடிய நிலையில் அவர் உறவினர் வீட்டில் இருந்தது தெரிய வரவே அங்கு சென்று கைது செய்தனர்.

# ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை

**அமைச்சர் சிவசங்கர்**



**கடலூர், அக்.14:** கடலூரில் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் பொதுமக்கள் செல்வதற்கு கூடுதல் பஸ்கள் இயக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார். அதன் பேரில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு தீபாவளி பண்டிகை முன்னிட்டு 4 நாட்களும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஸ்கள் கூடுதலாக இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

தீபாவளி பண்டிகை முடிந்த பிறகு மீண்டும் 3 நாட்கள் சென்னை மற்றும் பெருநகருக்கு செல்வதற்கு மற்றும் வருவதற்கும் கூடுதல் பஸ் வசதிகள் செய்யப்பட உள்ளது. கடந்த ஆண்டில் தனியார் பஸ்கள் ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டது. அதேபோல் இந்த ஆண்டும் தனியார் பஸ்கள் ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட உள்ளது. இதன் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் இயங்குகின்ற பஸ்கள் கிராமப்புறம் செல்வதற்கும், குறைபாடுகள் இல்லாமல் இயக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளபட்டு உள்ளது.

தற்போது ஆம்னி பஸ்களில் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக தகவல் வந்துள்ளது. அவர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் புதிய பஸ்கள் வாங்கி வருகின்றனர். அவர் அவர்கள் தனியாக ஆன்லைன் விண்ணப்பம் கொண்டு வந்துள்ளனர்.


ஏற்கனவே தனியார் ஆம்னி பஸ் சங்கத்தினர் கடந்த 2 ஆண்டுகளாக ஒத்துழைப்பு வழங்குவது போல் இந்தாண்டும் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என சங்க நிர்வாகிகள் உறுதி அளித்துள்ளனர்.

புதிதாக வருகிறவர்கள் இதுபோன்ற நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என தெரிவித்து உள்ளோம். இது தொடர்பாக குழு அமைத்து தீவிர விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொள்ளப்படும். எந்த நிறுவனம் ஈடுபட்டாலும் நேரடியாக தகவல் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அபராதம், மாதந்தோறும் வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய நிலை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.தமிழகத்தில் காலாவதியான வாகனங்கள் இயக்க முடியாது. ஒரு சில பஸ் உரிமையாளர்கள் விழா நாட்களில் மட்டும் ஒரு சில பஸ்கள் இயக்க நேரிடுகிறது. இதனையும் தொடர்ந்து கண்காணித்து கட்டுப்பாடு விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## சிறப்பு அலங்காரம்



பொள்ளாச்சி அக்டோபர் -13 ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் இன்றைய சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தைச் சேர்ந்த வரலாற்று பேராசிரியர் அரங்க மாயகிருஷ்ணன் ஜெயப்பிரதா ஆகியோர் வீடூர் பகுதியில் நேற்று கள ஆய்வு செய்த போது, 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நெசவு தொழிலுக்கு பயன்படுத்தப்பட்ட சுடுமண்ணால் ஆன துளை வடிவம் கொண்ட தக்களி, சுடுமண் பானை ஓடுகள், பெண்கள் கண்ணில் மை இடுவதற்கு பயன்படுத்திய செம்பினாலான அஞ்சனக் கோல் ஆகியவற்றை கண்டுபிடித்துள்ளனர்.

## மண்டல பூஜை



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த சின்னகரம் ஊராட்சியில் அருள்மிகு பொன்னியம்மன் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றதை முன்னிட்டு நாற்ப்பதாவது நாள் சிறப்பு மண்டல பூஜை நடைபெற்றது,




## உலக மனநல தினம் அனுசரிப்பு



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி அரசு மேல்நிலை பள்ளியில் மேஜிக் பஸ் பவுண்டேசன் இணைந்து உலக மனநல தினம் அனுசரிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் திரு நாகராஜன் அவர்கள் தலைமை தாங்கி மனநலம் பேணுவோம் என்ற தலைப்பில் உரையாற்றினார். கடலாடி அரசு கலைக்கல்லூரி பேராசியர் திரு கலையரசன் அவர்கள், முதுகுளத்தூர் அரசு கலைக்கல்லூரி பேராசிரியர் திருமதி ஜெயராணி அவர்கள், இராமநாதபுரம் ICTC கவுன்சிலர் திரு முகமது நயினார் அவர்கள் மனிதம் அறக்கட்டளையின் திரு முசாபர் கனி அவர்கள் மற்றும் யோகா பயிற்சியாளர் திரு திருமுருகன் ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மனநல விழிப்புணர்வு உரையாற்றினார்கள். நிகழ்ச்சி ஏற்பாடுகளை மேஜிக் பஸ் பவுண்டேசன் பொறுப்பாளர்கள் கவனித்தனர்.

# வில்வித்தை போட்டியில் மாணவர்கள் சாதனை



**சிவகங்கை, அக். 14:** சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாநில அளவிலான வில்வித்தை போட்டி பீனிக்ஸ் வில்வித்தை அகாடமி சார்பாக தனியார் பொறியியல் கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் மானாமதுரை வீரவிதை வில்வித்தை அகாடமி சார்பாக பயிற்சியாளர் முனைவர் பெருமாள் தலைமையில் பங்கேற்றனர்.8 வயதுக்குட்பட்ட பிரிவில் சுஷாந்த் இரண்டாவது இடத்தையும், ஜெயமித்ரன் மூன்றாவது இடத்தையும் பெற்றார்.

10 வயதுக்குட்பட்ட பிரிவில் கலையொழியன் முதல் இடத்தையும், லிடின் சாய் இரண்டாம் இடத்தையும் பெற்றார். ஆண்கள் பிரிவில் பிரனிஷ்,கிருத்திக்பில்லு, அதிரஞ்சன் முதல் இடத்தையும், பெண்கள் பிரிவில் தேசிகா ஸ்ரீ முதல் இத்தையும் பெற்றார். 14 வயதுக்குட்பட்ட பிரிவில் அருள்குமரன், ராஜ்குமார் முதல் இடத்தையும், புரபஷனல் பிரிவில் நித்தின் மெஸ்லி மூன்றாம் இடத்தையும் பெற்று அகாடமிக்கு பெருமை சேர்த்து உள்ளார்கள்.

வெற்றி பெற்றவர்களை பயிற்சியாளர், பெற்றோர்கள் வாழ்த்தினார்கள்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செங்கமேடு பகுதியைச் சேர்ந்த கோவிந்தனின் மகன் பள்ளிக்குச் செல்லும் போது பேருந்தில் இருந்து தவறி விழுந்து காயம் ஏற்பட்ட நிலையில் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த செய்தியை அறிந்து அக்டோபர் 13 அன்னியூர் சிவா எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டு தேவையான சிகிச்சை அளிக்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்த நாள் விழா



பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் பிறந்த நாளை முன்னிட்டு அக்டோபர் 13 திங்கட்கிழமை பால்பாண்டியன் பாத்திரக்கடை உரிமையாளர் கேபிளன் ரமேஷ் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு சிக்கன் பிரியாணி அன்னதானமாக வழங்கப்பட்டது இந்நிகழ்வில் மாநில கொள்கை விளக்க செயலாளர் வழக்கறிஞர் எஸ் பாலாஜி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் இன்று அக்டோபர் 13 திங்கட்கிழமை 5 புதிய தாழ்தள சொகுசு பேருந்து சேவையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து மஸ்தான் எம்எல்ஏ துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் போக்குவரத்து கழக அதிகாரிகள் பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## தினம் ஒரு குறள்

**மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**
**துன்பத்துள் துப்பாயார் நட்பு.** - குறள் 106

ఇడుములందు సాయపడినట్టి మైత్రిని
పీడఁరాదు మేలుఁ జాడవలయు. -కురల్ 106

निर्दोषों की मित्रता, कभी न जाना भूल ।
आपद-बंधु स्नेह को, कभी न तजना भूल ॥ - कुराल 106

Maravarka Maasatraar Kenmai Thuravarka
Thunpaththul Thuppaayaar Natpu - Kural 106

## மருந்தியல் பூங்கா திறப்பு



திண்டிவனத்தில் உள்ள சிப்காட்டில் அக்டோபர் 13 முதல்வர் ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக புதிதாக கட்டப்பட்டுள்ள மருந்தியல் பூங்காவை திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து மஸ்தான் எம்.எல் ஏ சிப்காட் அலுவலகத்தில் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் ,நகர மன்ற உறுப்பினர்கள் ஆர் .ஆர். எஸ் ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## பகுதிநேர நியாய விலை திறப்பு



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அன்னமங்கலம் ஊராட்சி கலிங்க மலை கிராமத்தில் அக்டோபர் 13 திங்கட்கிழமை புதிதாக கட்டப்பட்ட பகுதிநேர நியாய விலை கடையை மஸ்தான் எம்எல்ஏ திறந்து வைத்து குத்து விளக்கேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார் இந்நிகழ்வில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் எல் பி நெடுஞ்செழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## சைக்கிள் விழிப்புணர்வு



ஆரோவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், சைக்கிள் ஓட்டுவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று நடந்த 'சைக்கிளத்தான்' போட்டியில்101 பங்கேற்றனர் ஆண்களுக்கு 65 கி.மீ, பெண்களுக்கு 47 கி.மீ, கொண்டதாக அமைந்த இந்த போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் பதக்கங்கள் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் அளிக்கப்பட்டன.


## தங்கம் விலை புதிய உச்சம்..

**சென்னை, அக்.14** தங்கம் விலை வரலாறு காணாத புதிய உச்சத்தை அடைந்துள்ளது. அதன்படி, கிராமுக்கு ரூ.25 அதிகரித்து ஒரு கிராம் ரூ.15,525-க்கும், பவுனுக்கு ரூ.200 அதிகரித்து ஒரு பவுன் 92,200-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் தங்கம் விலை வரலாறு காணாத உச்சத்தை தொட்டு இருக்கிறது.

தங்கம் விலையை காட்டிலும், வெள்ளி விலைதான் பந்தயத்தில் வேகமாக முன்னேறுகிறது. இன்று கிராமுக்கு ரூ.5-ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.195-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 95 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் வெள்ளி விலையும் புதிய உச்சத்தை தொட்டு இருக்கிறது.

# கவிதை அரங்கம்!





அழுகின்ற வினாடியும்
சிரிக்கின்ற நிமிடங்களும்
வாழ்க்கை சக்கரத்தில்
நிரந்தரமில்லை

முழுமையாக தெரிந்து
கொள்ளாமல் எதையும்
மதிப்பிடாதே

அனுபவசாலிகள்
என்பவர்கள்
வயதை கடந்து
வருபவர்கள் அல்ல
வலிகளை கடந்து
வருபவர்களே

மகிழ்ச்சியான முகம்
தான் எப்போதுமே
அழகான முகம்

எதிர்பார்க்கும் போது
நடக்காததும்
எதிர்பார்க்காத
போது பல அதிசயங்கள்
நிகழ்வதுமே வாழ்க்கையின்
சுவாரஸ்யம்


நமக்கு குழி பறிக்க
யாரும் தேவையில்லை
நாம் விட்டுச் செல்லும்
கவனபிழைகள் போதும்

நம்மை பற்றி அடுத்தவர்
அறிந்து கொள்ளாத வரை
நாம் சுவாரஸ்யம் தான்
அறிந்து கொண்டால்
நாம் சாதாரணம் தான்

எல்லாத்தையும் ஏற்றுக்க
பழகிக்கோங்க வாழ்க்கை
எப்போ வேணாலும்
எப்படி வேனும்னாலும்
மாறிடும்

உன்னை செதுக்கி
கொள்ள
உளி தேவை இல்லை
பலரது அவமானங்களும்
சிலரது துரோகங்களும்
போதும்

## சரியான நேரத்தில் சரியான முடிவு...



ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும் புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன.

சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால் எதனைத தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையை பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. 'எதைத் துரத்தலாம்' என்று தயங்கி நின்றது. பிறகு, 'சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்' என்று முடிவு செய்து கறுப்பு மானை துரத்த தொடங்கியது. ஆனால் அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி... புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது.

ஆனால் புள்ளிமான் எப்போதோ பஞ்சாய் பறந்துவிட்டிருந்தது.

நம் வாழ்க்கையும் இப்படித்தானே வாய்ப்புகள் கண் முன்னே இருந்தும் சரியான நேரத்தில் சரியான முடிவுகள் எடுக்கவில்லை எனில்....

சிந்தித்துப் பாருங்கள்...

நீங்கள் இன்று இருக்கும் நிலைக்கு நீங்கள் எடுத்த அத்தனை முடிவுகளும் தானே காரணம்....

வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# "டிப்ஸ்"



அந்த ஹோட்டலில் புதிதாக சர்வர் வேலைக்கு சேர்ந்திருந்த குமரன் அங்குள்ள சட்டதிட்டங்களைக் கேட்டுக் கோபமானான்.

தன் கோபத்தை சக சர்வர் மூர்த்தியிடம் கொட்டினான்.

'அண்ணே நானும் இதுக்கு முன்னாடி ரெண்டு மூணு ஹோட்டல்ல சர்வரா வேலை பார்த்திருக்கேன். அங்கெல்லாம் இந்த மாதிரி கண்டிஷன் கிடையாது!"

அமைதியாய் மேலும் கீழும் தலையாட்டினார் மூர்த்தி.

'ஆறு மாசத்துக்கு ஒரு தடவை... ஒரு மாசம் லீவு கொடுப்பாங்களாம்... அப்பத்தான் வெளியூர்க்காரங்க ஊருக்கு போகணுமாம்' குமரன் சொல்ல.

"பின்னே?... வெளியூர்க்காரங்க சொந்த ஊருக்கு போயி... சொந்த பந்தங்களைப் பார்த்ததும் ரெண்டு மூணு நாள் லீவை... ரெண்டு மூணு மாசம் ஆக்கிட்ட இங்க யாரு வேலை பார்க்கிறது?... அதுக்குத்தான் அப்படி ஒரு சட்டம்!" சிறிதும் கோபமில்லாமல் மூர்த்தி சாதாரணமாய்ச் சொல்ல, ஆச்சரியமானான் குமரன்.

"என்னது இவரு தன்னுடைய கோபத்தை என்கிட்டக் காட்டுவார்னு பார்த்தா இவரு முதலாளிக்கு சப்போர்ட் பண்ற மாதிரியல்ல பேசுறார்!" என உள்ளுக்குள் நினைத்துக் கொண்ட குமரன், மேலும் தொடர்ந்தான்.

"அட... அது கூட தேவலை... இன்னொரு கண்டிஷன் வச்சிருக்காங்களே அது மட்டும் என்னால் கொஞ்சம் கூட ஏத்துக்க முடியல!... இதுக்கு முன்னாடி நான் வேலை செஞ்ச ஹோட்டலிலெல்லாம் கஸ்டமர்ஸ் கொடுத்திருக்கிற டிப்ஸை நாங்களே வெச்சுக்குவோம்... சொல்லப் போனால் அதுதான் எங்க பற்றாக்குறைக்கு ஒரு தீர்வாயிருக்கும்!... ஆனா இங்கே... கஸ்டமர் குடுக்குற டிப்ஸையெல்லாம் அப்படியே கல்லால கொண்டு வந்து குடுத்திடணுமாம்... கொடுமை... கொடுமை!" பற்களைக் கடித்துக் கொண்டு சொன்னான் குமரன்.

அப்போதும் அந்த மூர்த்தி ஒரு வார்த்தை கூட முதலாளியையோ... அந்தச் சட்டத்தையோ எதிர்த்து பேசாதிருக்க குமரனுக்குள் ஒரு சந்தேகம் கிளம்பியது, "ஒருவேளை இந்த மூர்த்தி ஓனருக்குச் சொந்தக்காரனா இருப்பானோ?.. நான்தான் விஷயம் தெரியாம இவன்கிட்ட உளறிட்டிருக்கேனோ?" லேசான அச்சம் உள்ளுக்குள் தோன்ற மூர்த்தியை முறைத்தபடியே அங்கிருந்து நகர்ந்தான் குமரன்.

ஊரில் உள்ள தன் குடும்பத்தின் ஏழ்மை நிலையையும், கணவரை இழந்த தன் தாய் இரண்டு பெண் பிள்ளைகளோடு கிராமத்தில் சிரமத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பதையும் நினைத்து தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு. அங்கேயே பணியை தொடர்ந்தான் குமரன்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு.

கல்லாவில் அமர்ந்திருந்த முதலாளி சுந்தர்ராஜ் குமரனை அழைத்தார்.

"குமரா... நீ வேலைக்கு சேர்ந்த ஆறு மாசம் ஆச்சு இன்னும் ஒரு தடவை கூட ஊருக்கு போகல... அதனால நாளையிலிருந்து உனக்கு ஒரு மாசம் லீவு தரேன் ஊருக்குப் போயிட்டு ஒரு மாசம் கழிச்சு வா"

ஊருக்கு போகப் போகிறோம் என்கிற சந்தோஷம் அந்த வினாடியே அவனுக்குள் பரவ ஒரு மகிழ்ச்சிப்பூ அவன் முகத்தில் மலர்ந்தது.

"சரிங்க முதலாளி" சொல்லி விட்டுத் திரும்பியவனை, "ஒரு நிமிஷம் நில்லு குமரா!" என்ற முதலாளி கீழே குனிந்து ஒரு கவரை எடுத்து அவனிடம் தந்து, "இதுல 40 ஆயிரம் ரூபாய் இருக்கு ஊருக்கு போகும் போது அம்மாவுக்கும், தங்கச்சிகளுக்கும் துணிமணி எடுத்துட்டுப் போ... ஸ்வீட்டெல்லாம் வாங்கிக் கொண்டு போய்க் கொடு"

"நாப்பதாயிரமா?... ஐயோ முதலாளி இந்தப் பணத்தை நான் எப்படித்....?".

"திருப்பிக் கொடுக்கிறது?"ன்னு தானே கேட்கறே?... நீ திருப்பித் தரவே வேண்டியதில்லை... ஏன்னா இது என்னோட பணமல்ல... உன் பணம்!... கஸ்டமர்ஸ் உங்களுக்குக் கொடுக்குற டிப்ஸை நான் வாங்கிக்கிறேன்.. அது ஏன் தெரியுமா?... நீ வெச்சிருந்தா ஏதாவது ஒரு செலவுதான் பண்ணிதிருப்பே... சேமிச்சு வைக்க மாட்டே!... அதனாலதான் அதை நான் வாங்கி உன் சார்பில் சேமித்து வைத்திருக்கிறேன் !.. அது கூட கொஞ்சம் என்னோட பணத்தையும் போட்டுத்தான்... இப்பத் தர்றேன் வாங்கிட்டு போ"

தன்னையும் அறியாமல் அவனுடைய கைகள் முதலாளியைக் கும்பிட்டன.



முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



டிராபிக் கான்ஸ்டபிள்:

யோவ் நடுரோட்டை விட்டு ஓரமா போய்யா. வண்டிக்காரனுங்க வந்து மோதிடப் போறானுங்க.

குடிகாரன்: என்னை ஓரமா போகச் சொல்லிட்டு நீங்க மட்டும் நடுரோட்டிலே நின்னா எப்படி.

# தினம் ஒரு சமையல்




## கணவாய் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| முட்டை கோஸ் | -½ கிலோ |
| இஞ்சி பூண்டு விழுது | -2 மேஜை கரண்டி |
| வெங்காயம் | -1 |
| தக்காளி | -2 |
| கொத்தமல்லி | -1கை |
| புதினா | -சிறிதளவு |
| கருவேப்பிலை | -2 கொத்து |
| பட்டை கிராம்பு ஏலக்காய் பொடி | -½ தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | -½ தேக்கரண்டி |
| மிளகாய் தூள் | -1 தேக்கரண்டி |
| மல்லி தூள் | -2 தேக்கரண்டி |
| பச்சை மிளகாய் | -2 |
| உப்பு | |
| கடலெண்ணை | -75 மில்லி |

செய்முறை:



ஒரு கடாயில் அல்லது ஒரு குக்கரில் சுத்தமான எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் அதில் இஞ்சி பூண்டு விழுது, பட்டை கிராம்பு ஏலக்காய் பொடி சேர்த்து நன்றாக பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.

பிறகு அதில் மசாலா பொருட்களை சேர்க்கவும்.பின்பு அதில் வெங்காயம்,சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி சேர்த்து வதக்கவும்.

பின்பு அதில் நறுக்கிய முட்டை கோஸ் சேர்த்து நன்றாக கிளறி அதில் கருவேப்பிலை,கொத்தமல்லி,புதினா இவை அனைத்தும் சேர்த்து நன்றாக கிளறி மூடி வைத்து 2 விசில் வந்ததும் இறக்கவும்.

## காட்டு எலுமிச்சை



நோய் தோன்றினால் மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்கிறோம். பழங்காலத்தில் காடுகளில்கிடைக்கும் தாவரங்களே மருந்து போல பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இன்றைக்கும் காடுகளில் வசிக்கும் பழங்குடியின மக்கள் வனங்களில் கிடைக்கும் மூலிகைகளையே மருந்தாக உட்கொள்கின்றனர்.

அந்த வகையில் சிறியவகை மரமான காட்டு எலுமிச்சையானது எண்ணற்ற மருத்துவ குணங்களை கொண்டுள்ளது. கிழக்கு வங்கத்தினைச் சேர்ந்த இந்த மரம். தென் இந்தியா, இலங்கை நாடுகளில் காணப்படுகிறது. ஒடிசா, அஸ்ஸாம், மேகாலயா மற்றும் அந்தமான் தீவுகளிலும் இது வளர்கிறது. இதன் இலைகள், வேர், கனிகள் மருத்துவப் பயன் கொண்டவை.

### செயல்திறன் மிக்க வேதிப்பொருட்கள்

இத்தாவரத்திலிருந்து எளிதில் ஆவியாகும் எண்ணெய் பிரித்தெடுக்கப்படுகிறது. இதில் பல வேதிப்பொருட்கள் உள்ளன. லினலுல், லினலைல் அஸிடேட், ப்ரைடிலின், எபிப்ரைடிலினால், கெம்ஃஸ்டிரால், ஸ்டகம ஸ்டிரலல், அட்லான்டேலைடு, அட்லாஃபெல்லைன், ஔரப்டென், மர்மிசின்

### தோல் வியாதிகள்

இலைகளின் கசாயம் தோல் வியாதிகளுக்கு மருந்தாகிறது. வேர் கிருமிகளுக்கு எதிரானது. தசை பிடிப்பு வலி போக்குவது. செயல்தூண்டுவி. வீக்கங்கள் மற்றும் மூட்டுவலிகளுக்கு மருந்தாகிறது. கனிகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் மேல் பூச்சாகிறது. கனிகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் மேல் பூச்சாகிறது. கனிகளின் எண்ணெய் காய்ச்சல் போக்கும், பக்கவாதம் மற்றும் மூட்டுவலிக்கு தடவப்படும்.

### விந்து உற்பத்தி அதிகரிக்கும்

இத்தாவரம் காய்ச்சல் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் ருசி மற்றும் பசி தூண்ட உதவுகிறது. இது உடல் வண்ணத்தை ஒளிரச்செய்யும் என்றும் விந்துவின் உற்பத்தியை ஊக்குவிக்க வல்லது எனவும் இராஜநிகண்டு என்னும் மருத்துவ நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனிகள் ஊறுகாயாகத் தயாரிக்கப்படுகிறது.

# மாரி செல்வராஜுக்கு என் படத்தின் மீது விமர்சனம் இருந்தது - பைசன் விழாவில் போட்டு உடைத்த பா.ரஞ்சித்




மாரி செல்வராஜ் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடித்துள்ள படம் 'பைசன்'. இப்படத்தில் துருவ் விக்ரமுக்கு ஜோடியாக அனுபமா பரமேஸ்வரன் நடித்துள்ளார். இது கபடி வீரரின் வாழ்க்கை வரலாற்று கதை ஆகும்.

இந்த படத்தை பா. ரஞ்சித்தின் நீலம் புரொடக்ஷன்ஸ் மற்றும் அப்ளாஸ் எண்டர்டெயின்மெண்ட் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன.

இந்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன், ரெஜிஷா விஜயன், பசுபதி, கலையரசன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். திரைப்படம் தீபாவளியை முன்னிட்டு வருகிற 17-ம் தேதி வெளியாக உள்ளது.

இன்று இப்படத்தில் டிரெய்லர் வெளியாகும் நிலையில், இப்படத்தின் ப்ரீ ரிலீஸ் நிகழ்ச்சியில் பேசிய இயக்குநர் பா. ரஞ்சித், "ராம் சார் தான் மாரி செல்வராஜை என்னிடம் அனுப்பிவைத்தார். மெட்ராஸ் படம் மீது மாரி செல்வராஜுக்கு விமர்சனம் உள்ளது என்று கூறி தான் ராம் என்னிடம் அனுப்பினார்.

அப்படி தான் மாரி செல்வராஜுடன் எனக்கு அறிமுகம் கிடைத்தது. பரியேறும் பெருமாள் படத்தை விட ஒரு இயக்குநராக பைசன் படத்தில் மாரி செல்வராஜ் வளர்ச்சி அடைந்துள்ளார்" என்று தெரிவித்தார்.

சினிமா




நடிகை பூனம் பஜ்வா சமீப காலமாக தாராள கிளாமராக போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து வருகிறார்.

அவரது லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# கஜினி பட வாய்ப்பை நிராகரித்தேன்.. சோனியா அகர்வால் காரணத்துடன் சொன்ன அதிர்ச்சியான விஷயம்

நடிகை சோனியா அகர்வால் தமிழில் பல முக்கிய படங்களில் நடித்தவர். இயக்குனர் செல்வராகவனை திருமணம் செய்துகொண்டு அதன் பின் சில வருடங்களிலேயே விவாகரத்து பெற்றுவிட்டார் அவர்.

அவர் திருமணத்திற்கு பிறகு பெரிதாக படங்களில் நடிக்காமல் தான் இருந்தார். அந்த நேரத்தில் தான் வருக்கு கஜினி பட வாய்ப்பு தேடி வந்ததாம்.



### நிராகரித்தேன்

"கஜினி படத்தில் அசின் மெயின் ஹீரோயினாக நடித்திருப்பார், மற்றொரு ரோல் எனக்கு வந்தது. ஆனால் அது வேண்டாம் என கூறிவிட்டேன். "

அசின் ரோல் என்றால் செய்கிறேன், இந்த ரோல் வேண்டாம் என சோனியா அகர்வால் கூறிவிட்டாராம். அதற்கு பிறகு தான் நயன்தாராவை அந்த ரோலில் முருகதாஸ் நடிக்க வைத்திருப்பார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com